O.S. 67/2025 நாள் 06.08.2026

வா.சா.1 மணித்தாய்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

தாவா சொத்து என்னுடைய தாத்தா விலைக்கு வாங்கியது. கருப்பசாமி தேவருக்கு பாண்டி தேவர் ஒரே ஆண் மகன் என்பது சரிதான். என் தாய் தந்தையருக்கு நானும், சுந்தரய்யாவும் பிள்ளைகள் என்பது சரிதான். கருப்பசாமி தேவர் என் அப்பா அம்மாவிற்கும் எங்களுக்கும் எந்த ஆவணங்களும் எழுதி வைக்கவில்லை என்பது சரிதான். என் தாத்தா கருப்பசாமி தேவர் 1/8 பங்கு தபசில் சொத்தை பிரிவின்றி வாங்கினார். மீதமுள்ள 7 பங்குகள் யார் யாருக்கு சொந்தம் என்று எனக்குத் தெரியாது. மீதி 7 பங்கு யாருக்கு பாத்தியப்பட்டது என்பதைத் தெரிந்து கொள்ள நான் முயற்சி செய்யவில்லை. என் தாத்தா, என் அப்பா மற்றும் நாங்கள் யாரும் 1/8 பங்கில் பாகம் கோரி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. தபசில் சொத்தில் சர்வே எண்.306/1ல் 1 ஏக்கர் 13 சென்ட்ம், சர்வே எண்.332/1ல் 1 ஏக்கர் 15 சென்ட் நிலத்திற்கு 03.11.2010ல் ஆவண எண்.3097/2010 என்ற கிரய ஆவணம் மூலம் செந்தில் என்பவருக்கு கிரயம் கொடுத்துவிட்டோம் என்றால் தெரியாது. சர்வே எண்ணும் அதனுடைய உட்பிரிவும் எனக்குத் தெரியாது. சர்வே எண்.306/1, 332/1ல் உள்ள நிலங்களை 18.11.2010ல் முத்துபாண்டி என்பவருக்கும், 01.06.2011ல் ஈஸ்வரி அவர்களுக்கும், 09.01.2012ல் கஸ்தூரி என்பவருக்கும், 23.07.2014ல் மாரியப்பன் என்பவருக்கும் பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் மூலம் எனது சகோதரர் சுந்தரய்யா விற்று விட்டார் என்றால்

Uploaded on 06.08.2026

எனக்குத் தெரியாது. நான் மேலே கண்ட கிரய சொத்துக்களை சேர்த்து தான் தனிப்பட்ட பாத்தியம் கோருகிறேன் என்றால் அது எனக்குத் தெரியாது. நான் கிரயம் கொடுத்தது பற்றியோ, எனது சகோதரர் கிரயம் கொடுத்தது பற்றியோ எனது பிராதிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் அதுபோல் நான் விற்கவில்லை. பிரதிவாதி தாக்கல் செய்திருக்கும் எதிர்வழக்குரையை நான் படித்துப் பார்க்கவில்லை என்றால் பதிலைப் பற்றித் தெரியாது. பிரதிவாதியின் அப்பா பெயர் கருப்பசாமி தேவர். என் தாத்தா கருப்பசாமி தேவர் என்ற பெயரைப் பயன்படுத்தி பிரதிவாதி தன் அப்பா பெயரும் கருப்பசாமி தேவர் என்பதால் இந்த சொத்துக்களை அவர் பாராதீனம் செய்திருக்கிறார். இதைச் சொல்லித் தான் நான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த கிரய பத்திரங்களை நான் பார்த்திருக்கிறேனா என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் அதைப் பற்றித் தெரியவில்லை. எனக்கு யாராவது படித்துக் காண்பித்தாலும் அது மனதில் நிற்பதில்லை. அந்த ஆவணங்களை நான் வக்கீலிடம் கொடுத்திருக்கிறேன். கோர்ட்டில் தாக்கல் செய்தாரா என்று எனக்குத் தெரியவில்லை. சுந்தரய்யாவுக்கும், சண்முகசுந்தரத்தின் அக்கா கோமதி என்பவருக்கும் திருமணம் ஆனது என்பது சரிதான். அவர்களுக்குள் திருமணம் ஆன 4 நாட்களில் விவாகரத்து ஆனது என்பதைக் காட்ட ஆவணம் எதுவும் இல்லை. அவர்களுக்கிடையில் திருமணம் விவாகரத்து ஆகவில்லை என்றால் நீதிமன்றம் மூலம் ஆகவில்லை. அவர்களாக தனியாக பிரிந்து சென்றுவிட்டார்கள். இரண்டு பேரும் இறந்துவிட்டார்கள். சர்வே எண்.306/1, 306/2, 306/3 ஆகிய உட்பிரிவுகளில் பிரிக்கப்பட்டு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா எண்.1252 என

ஏற்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. சர்வே எண்.332/1, 332/2 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அதைப் பொறுத்து 1ம் பிரதிவாதி பெயரிலும், முருகன், சுப்பையா தேவர் ஆகியோர் பெயரில் கூட்டு பட்டா மூலமாக பாத்தியப்பட்டுள்ளது என்றால் அது எனக்குத் தெரியாது. சர்வே எண். 456/1ஏ1, 456/1பி1, 457/1, 464/1சி1ல் 2 ஏக்கர் 90 சென்ட் பிரதிவாதிகளின் தாயார் ஆவுடைத்தங்கம் பெயரில் பட்டா எண்.80ல் பாத்தியப்பட்டு அவரின் இறப்பிற்கு பிறகு 1ம் பிரதிவாதியின் சகோதரியான கோமதி, சௌந்தரி ஆகியோர்கள் 10.5.2010ல் தங்களது பாகத்தை பதிவு ஏற்பாடு ஆவணம் மூலம் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் தெரியாது. இந்த பட்டாவில் உள்ள நபர்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியவில்லை. இந்த பட்டாவில் உள்ள நபர்களை இவ்வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 7/8 பங்கின் உரிமையாளர்களை பற்றி விசாரித்து அவர்களை இந்த வழக்கில் சேர்க்காததாலும், இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 1/8 பங்கு மட்டுமே உரிமையை வைத்துக் கொண்டு மொத்த சொத்தையும் எனது உரிமையாகக் கேட்டு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்குக் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நானும் என் தம்பி சுந்தரய்யாவும் கிரயம் எழுதி கொடுத்துவிட்டு தற்போது அந்த சர்வே எண்ணில் உள்ள சொத்துக்களையும் பிராது தபசில் சொத்துக்களாக காட்டி இந்த வழக்கு

தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு சட்டப்படி தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.